Vol. 5, Issue-1, June 2021 P.No. : 36 - 40

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

http://shcpub.edu.in

**முனைவர் சு. சிவசந்திரகுமார்**

உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.

**தலைப்பு :** வட்டார ஆசிரியர்களின் மருங்கொலி(ழ்) உச்சரிப்பும் விடைத்தாள் திருத்த இடைவெளிச் சிக்கல்களும்

பிழைத்திருத்தம் என்பது தருநர் கொடுத்த தகவல் சரியான முறையில் இருக்கிறதா என்பதை உரசிப் பார்க்கும் இடமாகும். கற்றல்/கற்பித்தலில் விளைவு மதிப்பாக அல்லது மதிப்பெண்ணாகக் கொள்ளப்படுகிறது. சிலவேளைகளில் மதிப்பெண் பெறாத , பெறமுடியாத மாணவர்கள் தாங்கள் மதிப்பெண் பெறுவதற்கான சூழலை அறிய இடமில்லாமல் இருக்கிறது. இக்கூற்றைத் தமிழ்மொழி விடைத்தாள் திருத்தத்தில் வட்டார ஆசிரியர்களின் மருங்கொலி (ழ் , ள் ) உச்சரிப்புடன் பொருத்திக் காட்டுவதன் மூலம் மாணவர்களின் ஒலி உச்சரிப்பினைக் கணினிச் செயலியின் மூலம் மதிப்பிட்டு மதிப்பெண் வழங்கலாம். அதையே மொழிச்செயல்முறைத் தேர்வாகக் *(Language Lab Pratical)* கொள்ளலாம் என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மருங்கொலி பக்கவாட்டு ஒலிகள்**

வாய் அறையில் மூச்சுக்காற்று ஓரிடத்தை அடைந்து நேராக வெளியேற்றாமல் நாக்கின் இருமருங்கிலும் வெளியேறும்போது பிறக்கின்ற ஒலி மருங்கொலி (ல, ர, ழ) ஆகும். மேற்கு கிளை மொழியில் லகரவொலி மட்டுமே காணப்படுகிறது. ள, ழ கரத்துடன் இணைந்துள்ளது. ல, ள , ழ ஒலி இணைவுகள் தமிழில் எண்ணற்ற கிளைமொழிகளில் காணப்படுகின்றன.


***ழ் (*l) வளைநா உரசொலி (Retroflex Fricative)***

தமிழுக்கேயுரிய சிறப்பொலியாகக் கருதப்படும் 'ழ'கர மெய் தமிழ்மொழியின் பேச்சு வழக்கில் ள், ய், ச் போன்ற திரிபுகளைப் பெறுகிறது. 'ழ கரம் 'ள'கரமாகத் திரிவதற்கு 'வீரசோழியம்' விதி வகுத்துள்ளது. இலக்கிய வடிவில் இவ்வொலி சில விடங்களில் கெட்டு விடுகின்றது. . எ.கா. போழ்து - போது வட்டார ஆசிரியர்களின் மருங்கொலி (ழ், ள்) உச்சரிப்பு இத்தகையத்து அல்ல. தொல்லெழுத்தியலில் இவ்வொலி சில இடங்களில் புள்ளி பெற்றும் , சில இடங்களில் புள்ளி பெறாமலும் காணப்படுகின்றன. ஒரே நூற்றாண்டுகளில் இத்தகைய மாற்றங்கள் இருப்பது வட்டார அடிப்படையிலான பதிவுகளோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது. மெய் எழுத்துக்கள் புள்ளி பெறுவது அசைத் தன்மை வேறுபாட்டையும் குறிக்கும் என்பது மறுப்பதற்கில்லை. "மெய்யின் இயற்கைப் புள்ளியோடு நிலையல்" எனும்போது இயற்கை என்பது பேச்சு மொழியை அதாவது உச்சரிப்பினை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ என்ற வினாவிற்கு வழி வகுக்கும். தொல்காப்பிய எழுத்ததிகாரப் பாகுபாட்டைப் பொருத்தவரையில் அது ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதனுள் கடைசி ஆறு இயல்களும் புணரியல் என்ற தலைப்பின் கீழும் நூன்மரபு, மொழிமரபு ஆகியன எழுத்தியல் என்றும், பிறப்பியல் தனியாக ஓர் இயலெனவும் இன்றைய ஆய்வாளர்கள் கொள்வர். உரையாசிரியர்கள் கருவி, செய்கை என்ற இருவகை எழுத்ததிகாரப் பாகுபாட்டைக் குறிப்பிடுகின்றனர். அவை முறையே எழுத்தியல், புணரியல் எனக் கொள்ளப்படுகின்றன. எனவே எழுத்தியல் = கருவி, புணரியல் = செய்கை எனில் இங்குப் பிறப்பியல் தனித்து நிற்றலை உணரமுடிகின்றது. அதனை மயங்கியலுடன் இணைக்கலாம். மயங்கியல் உயிர், புள்ளி இரண்டிற்கும் உரியது. பின்வரும் அட்டவணையும் , வரைப்படமும் அதையே விளக்கி அமைந்துள்ளன.


அட்டவணை மருங்கொலிக்கான தகவலாகவும் , வரைப்படம் மெய்யொலிக்கான தகவலாகவும் அமைந்துள்ளது.

| **வ. எண்** | **தொல்காப்பியர் குறிப்பிடும் புள்ளி பெறும் எழுத்துக்கள்** | **காலம்** | **புள்ளி பெற வேண்டியவை** | **புள்ளி பெற்றவை** | **புள்ளி பெறாவை** |
|---|---|---|---|---|---|
| 1 | மெய்யொலிகோ<br>ழிக்கறக்கள் | கி.பி.3. | ந்> ன்> ட்> ற்> ள்><br>ய்> ர்> த்> ழ் > ம்,<br>ங்.<br>11 | ன்> ற்> ள்><br>ந்;> த்> ங்<br>06 | ட> ய> ர> ழ><br>ம<br>05 |
| 2 | மெய்யொலி<br>இந்தளூர் | கி.பி.4. | ம்> ழ்> க்> ந்> த்><br>ன்> ண் >ள்> 08<br>08 | ம்> ழ் >க்<br>>ந்><br>த்> ன்>ண்<br>ள்<br>08 | -<br>0 |

***வரிசை எண் 1 & 2 ஆகியவற்றில் "ழ் (*l) வளைநா உரசொலி (Retroflex Fricative)"*** இருந்தபோதிலும் 1.முன்னது புள்ளி பெற்றிருப்பதும் 2.பின்னது புள்ளி பெறாமல் இருப்பதும் உற்றுநோக்குதற்குரியது. மேலும் , இவ்வரிவடிவங்கள் இரண்டும் வழக்குச் சொற் ஆவணங்கள் என்பது கவனிக்கப் படவேண்டிய செய்திகளாகும். உச்சரிப்பு ஒலிப்பு மாற்றத்திற்கு வட்டாரம் சார்ந்து ***ழ் (*l) வளைநா உரசொலி (Retroflex Fricative)*** மயங்கியுள்ளது என்பதற்கான புறச் சான்றாக இதனைக் கொள்ளலாம்.




*இக்கிளை மொழிகளில் வட்டார சூழலுக்கேற்ப ஒலி இணைவுகள் காணப்படுகின்றன. இவ்வொலிகள் கற்றல் / கற்பித்தலில் வட்டார ஆசிரியர்களால் உச்சரிக்கும் போது ஏற்படும் மாற்றங்களை லாஸ்வெல் மாதிரிக்கு உட்படுத்துவதைப் பின்வரும் வரைப்படம் குறிக்கிறது.*




*தருநர் - வட்டார ஆசிரியர்,*


*தகவல் - ழ் ,*

*ஊடகம் - பேச்சொலி,*

*கருத்து - மருங்கொலி ,*

*பெறுநர் - வட்டார மாணவர்கள்,*

*விளைவு - மதிப்பெண் இழப்பு.*




*தருநர் இடையூறு (Sender Noice) என்பதாகச் சொல்லலாம். தருநர் உச்சரிப்பு ஒலிகளில் ஏற்படுகின்ற மாற்றத்தையே சரியென கொள்ளக்கூடிய தகவல் பிழை மாணவர்கள் பிழையாக எழுதக்கூடும். பிழையாக எழுதப்படும் ஆயின் இதனைப் பொதுவான திருத்தத்திற்கு உட்படுத்தும்போது தருநரின் உச்சரிப்புக் கணக்கில் கொள்ளப்படுவதில்லை .விடைத்தாளின் வரி வடிவத்திற்கு மதிப்பெண்கள்*

வழங்கப்படுகின்றன. அல்லது மதிப்பெண் குறைக்கப்படுகின்றன. எதற்காக மதிப்பெண் குறைக்கப்பட்டது என்பது தெரியாத சூழலில் இன்றளவும் மாணவர்கள் உலவுவதுண்டு. எழுதிய விடைத்தாள்களைப் பெற்று அதில் சரியான முறையில் திருத்தம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கான வசதிகள் உள்ளன என்பதைச் சிலர் நினைவூட்டலாம். இணைச் சொற்களின் வேறுபாட்டைச் சிலர் உணர்ந்ததாகத் தெரியவில்லை என்பதாக இக்காலத் தமிழ்மரபை அடையாளங் காட்டுவார் கு.பரமசிவம்.(2011). வகுப்பறைச் சூழலில் வட்டாரமொழி ஆசிரியரின் உச்சரிப்பு ஒலியியலில் கணக்கில் கொள்ளப்படுவதில்லை என்பதுதான் இங்கு சிக்கலுக்குரிய விடயமாகும் லாபகரமாக உச்சரிப்பது சிலவேளைகளில் மாணவர்களுடைய விருப்பத்திற்குரியவராகவும், குறிப்பிட்ட வட்டார மொழியைப் பேசுவதில் வல்லவராகவும் பார்க்கப்படுகிறார் மாறாக அவர் ஒரு தமிழ் ஆசிரியர் என்ற அடிப்படையில் பார்க்கப்படுவதில்லை தவறு எங்கு நேர்கிறது என்பதே தெரியாத அளவிற்கு மாணவர்களும் தவறுக்கான சான்றுகளைச் சுட்டிக்காட்ட முடியாத இடத்தில் இருப்பதையும் அறிய முடிகிறது. இதனை, ஆசிரியர் முன்வந்து பயிற்சி முதலியவற்றால் தன்னை மாற்றிக் கொள்ளவும் அல்லது இதுபோன்று வட்டார இடைவெளி உள்ள பகுதிகளில் மாணவர்களுக்குக் கணினி செயலி மூலமாக உச்சரிப்பு ஒலிகள் பதிவு செய்தலை மொழிச் செய்முறைத்தேர்வாக (Language Lab Pratical) நடத்தலாம் அதன்மூலமாக மாணவர்களுடைய குறைபாட்டுச் சிக்கல்கள் களைக்கப்படும் என்பதாக இக்கட்டுரை கருதுகிறது.

**கட்டுரைக்கு உதவியன.**

1. சரண்யா.ஆர்., **தமிழ் உருபனியல்**,மொழியியல் உயராய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 2007.

2. பரமசிவம்.கு., **இலக்காலத் தமிழ் மரபு**, அடையாளம்,திருச்சி, 2011.

3. கீதா.வி., லலிதா ராஜா.இரா.(பதி.ஆ.), **மொழியறிவியல்,** மொழியியல் உயராய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், 2007.

4. இராகவையங்கார்.மு., **பழைய குறியீட்டெழுத்துக்கள்**, ஆராய்ச்சித் தொகுதி,தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.1984.

*5. இராமமூர்த்தி.இரா.,***தொல்காப்பியப் புணரியலும் சங்க இலக்கியமும்** *(உரைச் சுருக்கம்), தொல்காப்பியம்(எழுத்து, சொல் பயிலரங்கு), தாகூர் கலைக்கல்லூரி, தமிழ்த்துறை, புதுச்சேரி. 29. 10. 2009-07.11.2009.*